

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ் வார விழா நேற்று (29.04.2025) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக வளாகத்தில், அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில் "கவிச்சரம் நிகழ்ச்சியை கவிப்பேரரசு வைரமுத்து தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் அரசு முதன்மை செயலாளர் முனைவர்.ப.செந்தில் குமார், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேரா.மரு.கி.நாராயணசாமி, பதிவாளர் மரு.க.சிவசங்கீதா, வித்தகக்கவிஞர் பா.விஜய், கவிச்சுடர் கவிதைப்பித்தன், நெல்லை ஜெயந்தா, கவிஞர் யுகபாரதி, தஞ்சை இனியன், இரா.கருணாநிதி, மருத்துவக் கல்லூரியின் பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திராவிட மாடல் அரசின் பட்ஜெட் விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் சித்தாமூர் ஜங்ஷன் சரவணம்பாக்கம் கூட்டு சாலை பகுதியில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் கிருஷ்ணசாமி எம் எல் ஏ தலைமையிலும் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் புருஷோத்தமன் ஏற்பாட்டிலும் ஒன்றிய செயலாளர்கள் ஏழுமலை சிவக்குமார் சிற்றரசு ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் துரைசாமி சாமிநாதன் சிவக்குமார் குமார் பாபு ஞானகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நிதி மற்றும் மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம் எல் ஏ ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர் காஞ்சிபுரம் எம்பி ஜி. செல்வம் தலைமை கழக பேச்சாளர் பசும்பொன் ரவிச்சந்திரன் நிர்வாகிகள் இனியரசு, ஆர். டி. அரசு, அப்துல் மாலிக், குணா, மோகன்தாஸ், பிரேமா சங்கர், சாந்தி ரவிக்குமார் உள்ளிட்டர் கலந்து கொண்டனர்.

### படப்பை ஆ.மனோகரன் –ஏ.வந்தேமாதரம் பங்கேற்பு!

## குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில் ஊராட்சிகள்தோறும் நீர்மோர் பந்தல்!

### அமைச்சர் தா.மோ அன்பரசன் திறந்து வைத்தார்!

காஞ்சிபுரம், ஏப்.30-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்தில் அடங்கியுள்ள அய்யப்பன்தாங்கல் ஊராட்சியில் நேற்று (29.04.2026) காலை 09.00 மணியளவிலும், பரணிபுத்தூர் ஊராட்சியில் காலை 09.30 மணியளவிலும், மௌலிவாக்கம் ஊராட்சியில் காலை 10.00 மணியளவிலும், கெருகம்பாக்கம் ஊராட்சியில் காலை 10.30 மணியளவிலும், கோவூர் ஊராட்சியில் காலை 11.00 மணியளவிலும் ஆகிய பகுதிகளில் கோடை வெப்பத்தை தணிக்கும் வகையில் பொது மக்களுக்கு இலவச நீர்மோர் பந்தலினை காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் கலந்துகொண்டு திறந்து வைத்தார்.

இதில் காஞ்சிபுரம் மாவட்ட பெருந்தலைவர், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தே மாதரம், ஒன்றிய குழு துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், பொதுக் குழு உறுப்பினர் கே.எத்திராஜ், ஒன்றிய கழக நிர்வாகிகள் து.சுந்தர், கே.வசீகரன், பொன். ஜீவா, பூங்கொடி அரசு, எஸ்.ராஜாதேசிங்கு, எஸ்.சந்தானம், பா.ராஜேந்திரன், எஸ்.கே.துளசிங்கம், தி.க.பாஸ்கரன், டி.எஸ்.எம். ஜெயகரன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், ப.குமரவேல், தா.அன்பழகன், தமிழரசி சுரேஷ், எஸ்.ஜனார்த்தனன், எம்.ஆர்.நவீன் ராஜ், வெ.கவிபாரதி, கு.பிரவீன் குமார், கு.தமிழ்வாணன், இமான் கௌதமன், செ.ஹரிபிரசாத், ஆர்.பிரபு, வெ.வசந்தகுமார், பா.மகேஸ்வரன், ஆர்.ஹரி பாபு, து.நாராயணன், காமாட்சி பாலு, ஜோஸ்பின் கிளாரா, அமுதா சத்திய பிரியா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள இருப்பதால் குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட கழகத் தோழர்கள் இளைஞர் அணி, மாணவரணி, மகளிர் அணி நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொண்டனர்.

### முன்னாள் மாணவர் அணி துணைச் செயலாளர்

## நா.சேகர் தாயார் ரங்கநாயகி மறைவு!

### டி.கே.எஸ்.இளங்கோவன் - ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி - இரா.கிரிராஜன் அஞ்சலி

சென்னை, ஏப். 30 -

முன்னாள் மாணவர் அணி மாநில துணைச் செயலாளரும், முன்னாள் வடசென்னை மாவட்ட துணைச் செயலாளரும்,44வது வட்ட முன்னாள் மாமன்ற உறுப்பினருமான நா.சேகர் மற்றும் 44வது வட்டப் பொருளாளருமான நா.தட்சிணாமூர்த்தி ஆகியோரின் தாயார் திருமதி. நா.ரங்கநாயகி அம்மாள் வயது (87) 29.04.2025 காலை மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது மறைவுச் செய்தி கேள்வியுற்றதும்,கழக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன், சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, இரா. கிரிராஜன் எம்.பி., பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் சந்திரசேகர், பகுதிச் செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன், மதுராந்தகம் நகர்மன்றத் தலைவர் திருமதி. மலர்விழி குமார்,



வட்டச் செயலாளர் த.ஆறுமுகம், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஆர்.கமலக்கண்ணன், பூங்கா நகர் கண்ணன், ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர். கி.ராஜி, கோ.பொன்னிவளவன், த.சிவராம், வி.மணி பா.வினோத், ப.பிரதீப், தி.சாம் பிளசன், எஸ்.காண்டீபன், ராதாகிருஷ்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

அன்னாரது உடலடக்கம் இன்று (30.04.2025) காலை 10.00 மணிக்கு, வியாசர்பாடி பி.பி. ரோடு அருகிலிலுள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.






### கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்துகிறார்!

## காஞ்சிபுரம் சூர்யா ஆர்ட்ஸ் எம்.ஜெகன் நாதன் - தேவிகா இல்ல மணவிழா!

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ.முன்னணியினர் பங்கேற்பு

சென்னை, ஏப்.30,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், சூர்யா ஆர்ட்ஸ் எம்.ஜெகன்நாதன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளரும், ஸ்ரீ அஷ்டபுஜபெருமாள் திருக்கோயில் அறங்காவலருமான தேவிகா ஜெகன்நாதன் ஆகியோரின் புதல்வி ஜெ.சூர்யா–கு.சிவப்பிரகாஷ் ஆகியோரின் மணவிழா வரவேற்பு இன்று ( 30.4.2025 புதன்கிழமை) மாலை 6 மணிக்கு மோகன மஹால், பெரியார் நகர், சின்ன காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்றது.

இம் மணவிழா வரவேற்பில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்து கொண்டு மண மக்களை வாழ்த்துகிறார்.

மேலும் இதில் மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ.,, சிறுவேடல் க.செல்வம் எம்.பி., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மேயர் மகாலட்சுமி யுவராஜ் உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மணமக்கள் ஜெ. சூர்யா சிவப்பிரகாஷை வாழ்த்துகின்றனர்.

### சி.அற்புதராஜ் தலைமை! புழல் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்

## உ. பிரேம் குமார் தந்தை ஒன்றிய பிரதிநிதி என்.உதயசூரியன் படத்திறப்பு நிகழ்ச்சி!

### மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. திறந்து வைக்கிறார்! ஆர்.டி. மதன்குமார் பங்கேற்பு!

சென்னை, ஏப்.30-

புழல் ஒன்றிய இளைஞர் அணி துணைச் செயலாளர் உ. பிரேம்குமார், உ. பிரதீப் குமார் ஆகியோர் தந்தையும், வடகரை காந்தி தெரு, ஒன்றிய பிரதிநிதியுமான என். உதயசூரியன் 16 நாள் நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி புழல் ஒன்றிய பொறுப்பாளர் வழக்கறிஞர் சி. அற்புதராஜ் தலைமையில் இன்று (30.04.2026 புதன்கிழமை) மாலை 6 மணிக்கு ஜெ. ஜெ. நகர், வடகரையில் நடைபெறுகிறது.

அன்னாரின்திருவுருவப் படத்தை மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. திறந்து வைத்து மரியாதை செலுத்துகிறார்.

சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார் இரங்கல் உரை ஆற்றுகிறார்.

இதில் ப.வசந்தன், கோ. கந்தசாமி, மு.தனசேகர், கே.உதயகுமார், திராவிட. டில்லி, ஆதிவெங்கட், பாபா,பழனி, பி.கே.பக்கிரி, சி.ராதாகிருஷ்ணன், எஸ். புலேந்திரன், எஸ்.குணசேகரன், டி.ஆர்.சாமு, ப.ராகவன், எம்.ராஜேந்திரன், டி. ஜனார்தனன், கே.மோகன், எ.அன்பு, எ.தங்கராஜ், ஜி.சங்கர், ஜி.கே.சிலம்பு, ஜி.கே. கதிர், வி.எம்.டி.நேதாஜி, எஸ்.மனோதீபன், ஜெ.வி. நேதாஜி, ஜெ.ஜெயபால், சி.ரகு, ஆர்.நாகரஜ், ஆர். இளையராஜா, டி.கேசவன், இ.தங்கராஜ், ப.



கார்த்திகேயன், எஸ்.தமிழ் மண்ணன், டி.ஏழுமலை, யு.திருமாவளவன், சிலா. கதிர், ஏ.மதுரை, வி.சிவராமன், ஏ.யோகு, ஒன்றிய நிர்வாகிகள் ஆர்.செல்வமணி, ஆர்.முருகன், ஆர். வெங்கடேசன், ராஜேஸ்வரிஎத்திராஜ், அண்ணதுரை ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பெ.சரவணன், நா.ஜெகதீசன், வி.திருமாள், இ.பாஸ்கரன், மு.ரமேஷ், வடகரை.விஜி, சி.ஏழுமலை, திராவிடமணி, ஜி.கே.இனியன், செ. யுவராஜ், பி.சிவகுமார், எம்.எஸ்.மணிகண்டன், அ.டேவிட்(எ)நாவலன், ர.ஐயப்பன், ம.குறளரசன், அ.மணிமாறன், சே.அஸ்வின் மற்றும் உறவினர்கள் என்.ரவி, என்.செல்வகுமார் STACPMS, என்.ஆசைகுமார், டி.ஆர்.தேன்ராஜ், டி.ஆர்.சரண்ராஜ், எஸ். விக்கி, எ.மோகன்ராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். இறுதியில் குழல் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் உ.பிரேம் குமார் உதயசூரியன், உ. பிரதீப்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்களை காக்கும் சட்டம்!

## "கடன் வலுக்கட்டாய வசூல் தடுப்பு மசோதா 2025" தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றம்!

### தமிழ்நாடு ஆதித்தமிழர் பேரவைத் தலைவர் இரா.அதியமான் அறிக்கை!

சென்னை,ஏப்.30-

ஆதித் தமிழர் பேரவைத் தலைவர் இரா.அதியமான் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழக சட்டப்பேரவையில் கடந்த சனிக்கிழமை அன்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட புதிய மசோதாவான "வலுக் கட்டாய கடன் வசூல் தடுப்பு மசோதா 2025 " ஐ ஆதித்தமிழர் பேரவை வரவேற்கிறது.

கடனை வலுக்கட்டாயமாக வசூலித்தால் பிணையில் வர இயலாத 3 ஆண்டுகள் வ

வலுக்கட்டாய கடன் வசூலால், கடன் பெற்றவர்கள் தற்கொலை செய்து கொண்டால் கடனை வழங்கிய நிறுவனம் தற்கொலைக்கு தூண்டியதாக கருதப்படும் .

கடன் பெற்றவரையோ அவரது குடும்பத்தினரையோ நிறுவனங்கள் மிரட்டவோ, பின் தொடரவோ, அவர்களது சொத்துக்களை பறிக்கவோ கூடாது என்ற சட்டங்கள் மூலம் ஏழை எளியோரை நிம்மதிப் பெருமூச்சு விடச் செய்திருக்கிறது.

கசக்கி பிளியும் தனியார் கடன் நிதி நிறுவனங்கள் அத்துமீறி நடந்து கொள்ளும் மகளீர் சுய உதவிக்குழு நிதி நிறுவனங்கள் அடாவடி வசூல் செய்யும் வாகனக் கடன் மற்றும் இதர கடன் வசூலிப்பவர்கள் ஊழியர்கள் ஈடுபடும் வலுகட்டாய வசூலுக்கு

இச்சட்டத்தின் மூலம் கடிவாளம் போடப்பட்டிருக்கிறது.



ஒடுக்கப்பட்ட சமூகமான அருந்ததியர் உட்பட பல உடலுழைப்பு தொழிலாளர்கள் கட்டிடப் பணியாளர் தூய்மைப்பணியாளர் மற்றும் பெண்கள் உள்ளிட்ட பல்வேறு குடும்பத்தினரின் மன உளைச்சலில் இருந்து மீட்டு

மக்களை பாதுகாக்கின்றதோடு தற்கொலைகளை தடுக்கும் நடவடிக்கையாக இச் சட்டம் கொண்டுவரப் படுகிறது என்று நாங்கள் கருதுகிறோம்.

கட்டாய கடன் வசூல் என்ற பெயரில் அத்துமீறி நடந்துகொள்ளும் நிறுவனங்கள், ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் வகையில் சட்டப் பேரவையில் புதிய சட்ட மசோதாவை தாக்கல் செய்துள்ள துணை முதல்வர் உதயநிதி அவர்களுக்கும் நிறைவேற்றம் அடைய உறுதுணையாக இருந்த முதல்வர் தளபதியார் அவர்களுக்கு மற்றும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒடுக்கப்பட்ட விளிம்பு நிலை மக்கள் சால்பிலும் ஆதித்தமிழர் பேரவை சார்பிலும் மனமார்ந்த வரவேற்பையும் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க சார்பில் மௌலிவாக்கம் ஊராட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தண்ணீர் பந்தலை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்து, பொதுமக்களுக்கு பழங்கள், பழரசங்கள், இளநீர், மோர் ஆகியவற்றை வழங்கினார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழு துணை தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், தி.க.பாஸ்கரன், திவ்யா சத்தியநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.